# PATTAYAM
# APRIL 2011

# HOSANNAH CHURCH

**311. 'உதடுகளின் கனி' என்பது என்ன? அதை எப்படி தேவனுக்குச் செலுத்த வேண்டும்?**

'அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்' (எபி13/15) என வேதம் கூறுகிறது. உமது பீடத்தின் மேல் காளைகளைப் பலியிடுவார்கள் என சங்.51/19 கூறுகிறது., ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான் என சங்50/18ல் வாசிக்கிறோம்.

பழைய ஏற்பாட்டின்படி இரத்த பலிகளைச் செலுத்தினார்கள். அப்போது ஆண்டவர் பலியாக வரவில்லை. புதிய ஏற்பாட்டில் இயேசு தன்னையே நமக்காக பலியாக ஒப்புக் கொடுத்தார். உதடுகளின் காளையை செலுத்த வேண்டும். வாயை விரிவாய் திறந்து தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். உலகத்தில் எந்தவொரு காரியத்தையோ, பொருளையோ ஆண்டவருக்கு சரிசமமாகச் சொல்ல முடியாது. அவர் அவ்வளவு மேன்மையுள்ளவர். அவரை ஸ்தோத்தரிக்க நம் உதடுகளைத் திறக்க வேண்டும். நம் உதடுகளின் கனி இனிமையாக, அழகாக ஆண்டவர் கேட்பதற்கு சுவையாக இருக்க வேண்டும். வசனத்தின் அடிப்படையில் ஸ்தோத்திர பலிகள் இருக்க வேண்டும். ஆண்டவர் நமக்குக் கொடுத்த உதடுகளை அவரைத் துதிக்கும் உதடுகளாக மாற்ற வேண்டும். நம் உதடுகளிலிருந்து வரும் ஸ்தோத்திர பலி உற்சாகமாக காளையைப் போல இருக்க வேண்டும். (ஓசியா14/2). காளை உற்சாகத்தையும், பெலனையும் குறிக்கும். நாம் துதிக்கும் போது சாத்தானுக்கு விரோதமாக யுத்தம் பண்ண பெலன் வரும். நன்றாக ஸ்தோத்திரம் பண்ணுகிறவனைக் கண்டால் சத்ருவுக்கு பயம் வரும்.

வாழ்விலுள்ள தீமைகளெல்லாம் மாறிய பிறகு ஸ்தோத்தரிப்பேன் என சொல்லக்கூடாது. தீமைகளின் மத்தியிலும் ஸ்தோத்தரிக்க வேண்டும். கர்த்தர் செய்த நன்மைகளைச் சொல்லி அவரைத் துதிக்க வேண்டும். ஸ்தோத்திரம் பண்ணுகிற இடத்திலே ஆண்டவர் வருவார். அப்போது அங்கே சாத்தான் மேல் ஜெயம் உண்டாகும். அற்புதம் நடக்கும். துன்பத்தைப் பெரிதாக எண்ணாமல் அதன் மத்தியிலும் தேவனை ஸ்தோத்தரி. சங் 50/14,15ல் நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு, பொருத்தனை செலுத்தி, ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப் படுத்துவாய் என வாசிக்கிறோம். தீமையைக் கண்டு பயப்படாதே.

தீமைகளை தேவன் துரத்துவார். தேவ பிரசன்னத்தை உணர அதிகமாக ஸ்தோத்திர பலிகளை ஏறெடு.

சாதாரணமாக நாம் சொல்லுவது ஸ்தோத்திரம். துன்பத்தின் மத்தியில் செலுத்துவது ஸ்தோத்திர பலியாகும்.

சாஸ்திரிகள் இயேசுவுக்குப் படைத்தது பொன், தூபவர்க்கம், வெள்ளை போளமாகும். நம் துதி தூபவர்க்கம் போல எழும்ப வேண்டும். ஜெபம் + ஸ்தோத்திரமும் சேர்ந்தது தான் தூபவர்க்கம். இது புகை போல தேவனுக்கு முன்பாக எழும்பி பரலோகம் செல்லும். நாம் ஸ்தோத்திரம் பண்ணப் பண்ண, தேவதூதன் அவைகளை எடுத்து பரலோகத்திற்கு கொண்டு செல்வான் (வெளி8/4).

ஸ்தோத்திரத்தில் வளர வளர கிருபையில் வளருவீர்கள். வாழ்விலும் தாழ்விலும் தேவனை ஸ்தோத்தரியுங்கள். நம் ஆத்துமாவும், முழு உள்ளமும் அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும். கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் தேவாலயம் புகையினால் நிரம்ப வேண்டும். வாசல் நிலைகள் அசைய வேண்டும்; சாத்தான் கோட்டை அதிர வேண்டும்.

**312. பலவித சோதனைகளில் நாம் எப்படி ஜெயம் எடுக்க முடியும்?**

இயேசுவே வாசலாய், வழியாய், சத்தியமாய் இருக்கிறபடியால், அவர் வழியாக நாம் போக வேண்டும். அவர் வழியாய் நாம் போக வேண்டும். அவர் காட்டிய வழியாய் நாம் போக வேண்டும். அவர் ஆண்டவராக இருந்தும், பூமிக்கு வந்து ஒரு மனுஷனாகத் தன்னைத் தாழ்த்தி நாம் எப்படி வாழ வேண்டுமென்பதை வாழ்ந்து காட்டினார். நமக்கும் வாழ உதவி செய்கிறார். ஒழுக்கமாக நடப்பதற்கு ஆண்டவர் நமக்கு உதவி செய்கிறார். பாவ வழியில் செல்லாதபடிக்கு அவர் பிள்ளைகளுக்கு உதவி செய்வார். நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமை உண்டென்கிற பிரமாணத்தைக் காண்கிறேன். நான் விரும்பாததை செய்கிறபடியால், நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படி செய்கிறது. மனதின் பிரமாணத்திற்கு விரோதமாகப் போராடுகிற வேறொரு பிரமாணம் இருக்கிறது. மனம் ஒன்றைச் சொல்லும்; சரீரம் இன்னொன்றைச் சொல்லும். உள்ளே ஒளித்திருக்கும் பாவம் சொல்கிறபடி செய்யக்கூடாது. மனம் சொல்கிறது ‘கோபப்படாதே’ என்று. ஆனால் உள்ளே ஒன்று கோபத்தைக் கிளறி விடுகிறது. நமக்குள்ளே பாவம் என்ற மிருகம் ஒளித்திருக்கிறது. பாவத்தை ஆண்டவர் உதவியால் அடக்க வேண்டும். நிர்பந்தமான

மனுவுன் நான், இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? (ரோமர் 7/24). அவர் உதவியை நாம் நாடும் போது நமக்கு வழிகாட்டுவார், நல்வழியில் செல்ல நமக்கு உதவி செய்வார்.

### 313. பாடுகள் மத்தியில் எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருக்கக் கூடாது?

இந்த உலகத்தில் பலவிதமான சோதனைகள் நமக்கு உண்டு. ஆனால் அவர் வழியில் நடந்தால், நிச்சயம் நமக்கு வெற்றி உண்டு; உள்ளும் புறம்பும் நமக்கு மேய்ச்சல் உண்டு. பாடுகளின் மத்தியில் தேவனை மறுதலியாதே. மறுதலிக்கிறவர்கள் பரலோகம் போக முடியாது. என்னென்ன பாடுகள் வந்தாலும் விசுவாசத்தை விட்டு விடாதே. பின் வாங்கிப் போகாதே. பின்னடைந்து போகாதே.

பேதுரு பாடுகள் வந்தபோது மறுதலித்தான். ஆனால் யோபு பாடுகளின் மத்தியில் மறுதலிக்கவில்லை. அனனியா, சப்பீராள் சோதனைகளில் விழுந்து போனார்கள்; முடிவில் மரித்தார்கள். சோதனைகளில் விழுந்து போவதற்காக சோதனைகள் நமக்கு வரவில்லை. சோதனைகளில் ஜெயம் எடுக்க வேண்டும். யோசேப்புக்கு சோதனை வந்தது. அதில் அவன் விழுந்து போகவில்லை. அவப்பழிகள் வந்தது; சிறைச்சாலைக்குப் போக வேண்டியது வந்தது. அவன் தேவனை மறுதலிக்கவில்லை. முடிவில் ராஜாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் உயர்த்தப் பட்டான்.

மோசே பார்வோனின் மகன் என்னப் பட்டாலும், தேவபிள்ளைகளோடு பாடு அனுபவிப்பதைத் தெரிந்து கொண்டான். அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதை அவன் தெரிந்து கொள்ளவில்லை. கர்த்தர் மோசேயோடு முகமுகமாகப் பேசினார். மோசே தேவனிடமிருந்து பத்து கட்டளைகளைப் பெற்றான். தேவன் அவனுக்கு பல அதிகாரங்களைக் கொடுத்தார். பரமகானானுக்கு நேராக போய் கொண்டிருக்கிற நாம் நம்மை உலகத்தாரைப் போல நினைக்கக் கூடாது. பாடுகள் வந்தாலும் அவைகளைப் பெரிதாக எண்ணக் கூடாது. பாடுகள் மத்தியிலும் ஆண்டவருக்கும் மனுஷருக்கும் பிரயோஜனமாக இருப்பவன் தான் பாக்கியவான். பல பாடுகள், நெருக்கங்கள் உங்கள் வாழ்வில் வந்தாலும், உங்களைக் கொண்டுள்ள தேவ சித்தம்

நிறைவேறுகிறதா என்பதை சிந்தித்துப் பாருங்கள். அப்படி நிறைவேறிக் கொண்டிருந்தால், சோர்ந்து போகாதிருங்கள். உன் நோக்கம் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதாக இருக்க வேண்டும். ஆபிரகாமுக்கு தேவன் ஆத்துமாக்களைத் தான் வாக்குக் கொடுத்தார். நட்சத்திரத்தைப் போலவும், மணலைப் போலவும் உன் சந்ததியைப் பெருகப் பண்ணுவேன் என்றார். இது விசுவாச சந்ததியாகும். பணத்தைச் சம்பாதித்தால் அது உன்னோடு வராது. நீ ஆத்துமாக்களைச் சம்பாதித்தால் அவைகள் நிச்சயமாக பரலோகம் வரும். ஆகவே இம்மையிலும் மறுமையிலும் உனக்கு பலன் உண்டு.

அவிசுவாசத்திற்கு இடம் கொடாதிருங்கள். அவிசுவாச வார்த்தைக்கும், வீண் வார்த்தைக்கும், முறுமுறுப்புக்கும் இடம் கொடாதிருங்கள். ஆண்வடரிடம் உங்களை முழுமையாய் ஒப்புக் கொடுங்கள். அவர் உங்களுக்காக யாவும் செய்து முடிப்பார்.

### 314. ஆண்டவர் நுகம் எது? அதை சுமக்கும் போது எவைகளை தேவன் நமக்குத்தருவார்?

ஆத்துமாக்களை சுதந்தரிப்பது தான் ஆண்டவரின் பார்வையில் ஆசீர்வாதமாகும். கர்த்தருக்கடுத்த காரியங்களில் வாஞ்சையாய் இருங்கள். அப்போது உங்களுக்கடுத்த காரியத்தை அவர் பார்த்துக் கொள்வார். அவர் நுகத்தை உன் மேல் ஏற்றுக் கொண்டு அவரிடத்தில் கற்றுக் கொள். அப்பொழுது உன் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். அநேக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண வேண்டும் என்ற நுகத்தை ஆண்டவர் நம் மேல் வைக்கிறார். அவர் நுகத்தை நாம் உண்மையோடு சுமந்தால், சாத்தான் வைக்கிற எல்லா நுகங்களையும் அவர் முறித்துப் போடுவார். ஆத்தும ஆதாய நுகத்தை நீங்கள் சுமக்கும் போது மற்ற எந்த தீமையோ, தீவினைகளோ உங்களைத் தொடாதபடி அவர் உங்களைப் பாதுகாப்பார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும். உலகத்தைச் சுதந்தரிப்பான் என்பது கர்த்தர் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம். விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் தேவன் பயன்படுத்த முடியும் (ரோமர் 4/13 )

திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தைச் செலவழிக்கக் கூடாது. அழியாத பொருள் 'ஜீவ அப்பமாகிய இயேசு' ஒருவரே. மற்ற எதுவும் ஜீவ அப்பம் அல்ல. வேறு எதுவும் நம்மைத்

திருப்தி செய்யாது. நிறைய இருந்தவுடன் திருப்தி வந்து விடாது. மெய்ப் பொருளாகிய இயேசு மட்டுமே தெவிட்டாது; அது ருசிக்கும். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்க்க வேண்டும். பல பிரச்சனைகள் மத்தியில் நீங்கள் ஊழியத்தைச் செய்தாலும், கர்த்தர் நிறைவான சந்தோஷத்தை உங்களுக்கு பிரதிபலனாகக் கொடுப்பார். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான். ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான் (சங் 126/6).

கர்த்தருக்கடுத்த காரியத்தில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். இது மட்டும் தான் உங்களுக்கு நிலையான சந்தோஷத்தைத் தர முடியும். இதனால் திருப்தியும். நிறைவும் கிடைக்கும். வேறு எதைச் செய்தாலும் திருப்தியும் வராது. நிறைவும் வராது. நன்றாக சாப்பிட்டால் சரீரத்திற்கு திருப்தி கிடைக்கலாம். ஆனால் ஆத்துமாவுக்கு திருப்தி கிடைக்காது.

## 315. ஆண்டவரை இன்னும் அதிகமாக நெருங்குபவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள் எவைகள்?

வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே, நீங்களெல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் கொடுப்பேன் என்றார் இயேசு. இந்த உலகத்திலே உபத்திரவம், பாடு, துன்பம் உண்டு. அதே நேரம் நாம் தேவனைப் பற்றிக் கொள்வோமானால் நமக்கு இளைப்பாறுதல் உண்டு; விடுதலை உண்டு; இம்மையில் வாழ்வு உண்டு; மறுமையில் நித்திய வாழ்வு உண்டு. எவ்வளவாய் அவரை நெருங்குகிறோமோ அவ்வளவாய் இளைப்பாறுதல் உண்டு, அவரைத் தேடாதவர்களுக்கு இளைப்பாறுதல் இல்லை. அவர் பிள்ளைகளுக்கு நாளுக்கு நாள் எல்லா காரியங்களிலும் பிரகாசம் தருவார். அவர்களைக் கொண்டு மேன்மையான காரியங்களைச் செய்வார். பெலவீன நேரங்களிலே இன்னும் அதிகமாக ஆண்டவரைப் பற்றுங்கள். அப்போது பெலவீனத்திலே அவர் பெலன் பூரணமாக விளங்கும். நாளுக்கு நாள் அவரைக் கிட்டிச் சேருங்கள்; நாளுக்கு நாள் பரிசுத்தமடையுங்கள். அப்போது எந்த எதிர்காற்று வந்தாலும் நீங்கள் அசைக்கப்படுவதில்லை.

## 313. யாருக்கு பயப்பட வேண்டும்?

கர்த்தருக்கு பயப்படுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும். பிசாசுக்கும், கொடிய பாவிகளுக்கும் நாம் பயப்படக் கூடாது. ஆண்டவரைத் தவிர வேறு எதற்கும் பயப்படக் கூடாது. இயேசு

நம்மோடு இருக்கிறார். நாம் விசுவாசிக்கும் போது அவர் கிரியை செய்கிறார். இயேசு இல்லாத இடம் இல்லை, அவர் பார்க்காத இடமும் இல்லை. ஆகவே நாம் பயத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது. இயேசு நம்மோடு இம்மானுவேலாய் இருப்பதால் நாம் பயப்படக் கூடாது. இயேசு நம்மோடு இருக்கிறார் என்ற விசுவாசம் இல்லாதபடியால் தான் நமக்குள் பயம் வருகிறது. நாம் விசுவாசிக்காவிட்டால் அவர் செயல்பட முடியாது. காற்றும், கடலும் கொந்தளித்தாலும், ஆண்டவர் அடக்குவார் என்பதை விசுவாசிக்க வேண்டும்.

### 317. ஏன் பயத்திற்கு இடம் கொடுக்க கூடாது?

1. விசுவாசம் குறைந்து போகும்
2. விசுவாச ஜெபமும் குறைந்து போகும்.
3. ஜெபிக்காவிட்டால் பாவ சோதனை, சாத்தான் சோதனை, சத்துரு சோதனை இவைகளில் ஜெயம் எடுக்க முடியாது.

### 318. தேவனுக்கு பயப்படுதல் என்றால் என்ன?

சிலர் தேவனுக்கு பயந்தது போல எல்லா காரியமும் செய்வார்கள். அதே சமயம் பாவம் செய்ய பயப்பட மாட்டார்கள். பாவம் செய்ய பயப்படாதவன் தேவனுக்கு பயப்படாதவன், கெட்ட வார்த்தை பேசக் கூடாது என தெரிந்தும் பேசுவார்கள். தவறு செய்யக் கூடாது என தெரிந்தும் துணிந்து செய்வார்கள். எல்லா சூழ்நிலையிலும் பாவம் செய்யாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறவன் தான் தேவனுக்குப் பயப்படுகிறவன், ஒருவரும் பார்க்காத சமயத்திலும் பாவம் செய்யக்கூடாது. தனிமையாக இருக்கும் போது பாவம் செய்யக் கூடாது. கர்த்தர் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தோடு இருங்கள். பாவம் செய்கிறவன் கர்த்தருக்குப் பயப்படாதவன் கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என நீதி 1/7 கூறுகிறது. பாவம் செய்யப் பயப்படுகிறவர்கள் தான் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள். கர்த்தருக்குப் பயப்படாதவன் பயப்பட வேண்டியவர்களுக்குப் பயப்பட மாட்டான்; கீழ்படிய வேண்டியவர் களுக்குக் கீழ்படிய மாட்டான். நாம் ஆண்டவருக்குக் கணக்கு கொடுக்க வேண்டும். அவர் மறந்து போகிற தேவனல்ல. கர்த்தருக்குப் பயப்படுகிறவன் தான் ஞானத்தைப் பெற்றவன்.

### 319. பரிசுத்த ஸ்தலத்தில் வரும் போது நாம் எப்படி காணப்பட வேண்டும்? எப்படி இருக்கக் கூடாது?

அவர் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்து பயபக்தியாய் இருக்க வேண்டும். பரிசுத்த அலங்காரத்தோடு நாம் இருக்க வேண்டும். அவர் ஸ்தலத்தில் அவர் நம்மைத் தம் இரத்தத்தால், ஆவியால், வசனத்தால் கழுவி பரிசுத்தப் படுத்துகிறார். நம் ஆத்துமா வசனத்தால் கழுவப் படுகிறது. இயேசு தம் இரத்தத்தை நம் மேல் தெளிக்கிறார்; அவர் இரத்தம் நம்மைக் கழுவுகிறது. பரிசுத்த ஆவியானவரும் நம்மைக் கழுவுகிறார். தீண்டாமை எனும் பாவம் பரி. ஸ்தலத்திற்குள் வருபவர்களிடம் இருக்கக் கூடாது. சபை கூடுகிற இடத்திலே ஜாதிக்கு இடமில்லை. ஆகவே தான் தேவன் ஒருவர் கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள் என்ற கட்டளையை ஆலயத்தில் வைத்திருக்கிறார்.

பரி. ஸ்தலத்தில் கர்த்தருக்கடுத்த காரியங்களை மட்டுமே பேச வேண்டும். அங்கே உலகத்துக்கடுத்த காரியங்களைப் பேசக் கூடாது. அவர் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்து பயபக்தியாக இருக்க வேண்டுமானால் உலகத்துக்கடுத்த காரியங்களை ஆலயத்தில் வைத்துப் பேசக் கூடாது. பரி. ஸ்தலத்தை நாம் தீட்டுப்படுத்தக் கூடாது. அவருக்கு பிரியமில்லாத காரியங்களைப் பேசக் கூடாது.

பரி. ஸ்தலத்தை அசுத்தப்படுத்தக் கூடாது. நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி; உன் பாதரட்சைகளை கழற்றிப்போடு என மோசேக்குச் சொல்லப்பட்டது. அந்த இடத்தைச் சுத்தமாக பாதுகாக்க எண்ணம் நமக்கு இருக்க வேண்டும். அவர் சமுகத்தில் பயத்தோடு, நடுக்கத்தோடு இருக்க வேண்டும். தேவ சமுகத்தில் துணிகரமாய் பேசக் கூடாது; சண்டை போடக் கூடாது. மனம் பதறிப் பேசக் கூடாது, நம் வார்த்தை சுருக்கமாக இருக்க வேண்டும். பேச வேண்டியதை மட்டுமே பேச வேண்டும். பொது சபையிலே அதாவது ஆண்களும் பெண்களும் இருக்கிற இடத்திலே ஸ்தீரிகள் பிரசங்கிப்பது அயோக்கியமாயிருக்கும் என I கொரி 14/34 கூறுகிறது. I தி 2/12 ன் படி புருஷன் மேல் அதிகாரம் செலுத்த ஸ்திரிகளுக்கு உத்தரவு இல்லை. அதாவது பொது சபையிலே உபதேசம் பண்ண ஸ்தீரிகளுக்கு உத்தரவு இல்லை. ஸ்தீரிகளுக்கு ஆண்கள் தலையில் கைகளை வைத்து ஜெபிக்கவும் அதிகாரம் இல்லை. ஆலயத்துக்கு வரும் போது பரிசுத்த அலங்காரத்தோடு வர வேண்டும். தேவனைக் கனம் பண்ணும் படியாக ஸ்திரிகள் ஜெபிக்கும் போது தலையில் முக்காடு போட வேண்டும்.

### 320. பரிசுத்த ஸ்தலம் எப்படிபட்ட இடமாக இருக்கக் கூடாது?

பரி. ஸ்தலம் என்று ஒரு இடம் குறிக்கப்பட வேண்டுமானால் அந்த இடம் தேவனுக்கென்று ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதிலே வேறு எந்த வேலையும் செய்யப்படக்கூடாது. அங்கே தேவனுக்கடுத்த காரியங்கள் மாத்திரமே நடக்க வேண்டுமே தவிர வேறு எந்த காரியமும் நடக்கக் கூடாது. வேறு காரியங்கள் அங்கே நடந்தால் அது பரி.ஸ்தலம் என அங்கீகரிக்கப்பட முடியாது. சிலர் 2 வருடம் ஆலயத்திலே கூடி ஆராதிக்கிறார்கள்; பின்பு அந்த இடத்தை விற்று விடுகிறார்கள். அதிலே கடையோ, வியாபாரமோ நடக்கிறது. பரி. ஸ்தலத்தை வீடாக மாற்றி விடுகிறார்கள். அசுத்தமாக்கி விடுகிறார்கள். கர்த்தருக்கென்று ஒரு இடத்தை ஒப்புக் கொடுத்தால் அது கர்த்தருக்கென்றே இருக்க வேண்டும். ஞாயிற்றுக் கிழமை மாத்திரம் ஆராதனை. மற்ற நாட்களில் வியாபார ஸ்தலமாக இருந்தால் அது பரி. ஸ்தலமாகாது.

### 321. பூரண சற்குணன் என்றால் என்ன?

பரலோகத்திலுள்ள உங்கள் பிதா பூரண சற்குணராயிருப்பது போல நீங்களும் பூரண சற்குணராயிருங்கள். (மத்தேயு 5/48) நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பிள்ளை ஸ்தானத்திருந்து நாம் வளர வேண்டும். நாம் ஞானப்பாலைக் குடித்து வளர வேண்டும். திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிரு. அதனால் தினமும் உன் ஆத்துமா வளரும். நாளுக்கு நாள் புது சிருஷ்டியாக மாறுவாய். ஆவிக்குரிய ஜீவியத்தில் வளராதவர்களுக்கு கடின உணவு கொடுக்க முடியாது. இன்னும் மாம்சத்தின் கிரியைகள் உள்ளவர்களுக்கு பால் தான் குடிக்க கொடுக்கப்பட வேண்டும். பிள்ளை ஸ்தானத்திருந்து புருஷன் ஸ்தானத்திற்கு வளர வேண்டும். வளரும் அனுபவத்துக்குள் வந்தால் தான் தேவன் உங்களுக்கு அநேக சத்தியங்களைச் சொல்லி கொடுப்பார். அடிப்படை உபதேசத்தில் தெளிவு உள்ளவர்களாகவும், கீழ்ப்படிபவர்களாகவும் இருக்க வேண்டும்.

பிள்ளைக்கும், புருஷனுக்கும் வித்தியாசம் உண்டு. பிரசங்கி 7/28 சொல்கிறது ஆயிரம் பேருக்குள்ளே ஒரு புருஷனைக் கண்டேன். இவர்களெல்லாருக்குள்ளும் ஒரு ஸ்தீரியை நான் காணவில்லை. 1000 பேருக்குள் தேறினவன் ஒருவன் மட்டுமே. ஸ்தீரி என்றால் மணவாட்டி. பிள்ளை ஸ்தானத்திருந்து புருஷர்களாக மாறி மணவாட்டி ஸ்தானத்திற்கு வர வேண்டும். நீதியின் சூரியனாகிய இயேசுவை

அணிந்திருக்கும் ஸ்திரியாக நாம் மாற வேண்டும். நம்மைக் காண்பவர்கள் நம்மில் இயேசுவைக் காண வேண்டும் (வெளி 12/1). இயேசு என்னும் அலங்காரம் உன்னில் வெளிப்பட்டால், உனக்கு நகை அலங்காரம் தேவையில்லை. அப்படிப்பட்ட ஸ்தீரியாக மாற வேண்டும். கர்த்தரே உன் அலங்காரமாயிருக்க வேண்டும் அப்போது உன்னைக் காண்பவர்கள் உன்னிலே இயேசுவைக் காண்பார்கள். நீதியின் சூரியனாகிய இயேசுவை அணிந்திருப்பவர்கள் தான் பூரண சற்குணர்.

## ஞானமும்ஜெபமும்

1. **உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக - யாக்கோபு 2/8**

கர்த்தாவே! என் மேல் எவ்வளவு அன்பு வைத்துள்ளேனோ அவ்வளவு அன்பு பிறனிடத்தில் வைப்பேனாக.

உம்முடைய படைப்பாகிய மனுக்குலத்தின் மேல் அன்பு கூருவேனாக.

மனுக்குலத்தின் நன்மைக்காக, மேன்மைக்காகப் பிரயாசப் படுவேனாக

கர்த்தாவே! மனுக்குலத்தின் மேல் வரும் தீமைகளைக் கட்டி ஜெபிப்பேனாக

கர்த்தாவே! சமாதானத்தை விரும்புவேனாக; சமாதானத்தை நாடுவேனாக; சமாதானம் பண்ணுவேனாக.

கர்த்தாவே! அன்பில் நாளுக்கு நாள் வளரப் பண்ணும்

அன்பில் குறையாது இருப்பேனாக.

**2. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். பி□4/4**

கர்த்தாவே! தாழ்விலும் உமக்குள் சந்தோஷமாய் இருப்பேனாக.

வாழ்விலும் உமக்குள் சந்தோஷமாய் இருப்பேனாக.

என் விருப்பமெல்லாம் நிறைவேறாமல் போனாலும் உமக்குள் சந்தோஷமாய் இருப்பேனாக.

கர்த்தாவே! எல்லாரும் என்னைக் கைவிட்டாலும் உமக்குள் சந்தோஷமாய் இருப்பேனாக.

கர்த்தாவே! எனக்கு அருமையானவர்களும் என்னைப் புறக்கணித்தாலும் உமக்குள் சந்தோஷமாய் இருப்பேனாக.

கர்த்தாவே! என் சரீரம் அழுகி, ஆகாதவன் என்று தள்ளப்பட்டாலும் உமக்குள் சந்தோஷமாய் இருப்பேனாக.

**3. 'திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்'-வெளி 3/8**

கர்த்தாவே! தாவீதின் திறவுகோல் உடையவரே! உமக்கு ஸ்தோத்திரம்.

ஊழியத்தின் பாதையில், உமக்கு மகிமை சேர்க்கும் பாதையில் எமக்கு எப்போதும் வாசலை, வாசல்களைத் திறந்தே வைத்திடும்.

மனுஷனோ, சாத்தானோ, இயற்கையோ, செயற்கையோ, மந்திரமோ, தந்திரமோ, அந்தகாரலோகாதிபதிகளோ, அதிபதிகளோ, அதிகாரிகளோ ஊழிய வாசல்களை ஒருபோதும் அடைக்க விடாதேயும்.

**4. 'என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்' - யோ 14/27.**

கர்த்தாவே! உம்முடைய சமாதானத்தை எனக்குள் தந்து உம் ஆறுதல், உம் இளைப்பாறுதல், உம் சந்தோஷம், உம் பேரின்பம், உம் சௌக்கியம், உம் ஆரோக்கியம், உம் குணமாகுதல் எல்லாவற்றிலும் பங்காளியாக மாறும் சிலாக்கியமருளும். ஆமென்.

**5. 'நீ பயப்படாதே நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்' - ஆதி. 15/1.**

கர்த்தாவே! நீர் எனக்குக் கேடகமாயிருந்து எல்லாவித சாத்தான் அம்புகளை முறித்துவிடும்.

நீர் கேடகமாய் இருந்து எல்லா சொல்லம்புகள் எம்மைத் தாக்காது பாரும்.

நீரே கேடகமாயிருந்து நாவின் அம்புகள் (குத்துவது போல் பேசப்படும் பேச்சுகள்) தாக்காது காத்திடும்.

நீரே கேடகமாயிருந்து துன்மார்க்கரின் சகல அம்புகளையும் முறித்திடும்.

நீரே கேடகமாயிருந்து வன்கண் என்னும் அம்பு, இச்சை என்னும் அம்பு தொடாது காத்திடும்.

6. **கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் - எரேமியா 9/24**

கர்த்தாவே! கிருபையால் ஐசுவரியம் தாரும்; கிருபையால் ஞானம் தாரும்; கிருபையால் பராக்கிரமம் தாரும்; கிருபையால் இரட்சிப்பு தாரும்; கிருபையால் நித்திய ஜீவன் தாரும்; கிருபையால் நிர்மூலமாகாது காத்திடும்; கிருபையால் நீதி செய்யும்; கிருபையால் நியாயம் செய்யும்; கிருபையால் நீதிகள் செய்ய உதவும்; கிருபையால் பெலவீனத்தில் பெலப்படுத்தும்; கிருபையால் வல்லமை மேல் வல்லமை அருளும்; கிருபையால் சுகம் அருளும்.

7. **கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார் - உபா 28/1**

கர்த்தாவே! எம் மூலம் உமக்கு மகிமை சேர்க்கும் காரியங்கள் செய்தருளும். மேன்மையான காரியங்கள், சிறப்பான காரியங்கள், வல்லமையான காரியங்கள், நன்மையான காரியங்கள், ஆசீர்வாதமான காரியங்கள், உத்தமமான காரியங்கள், அற்புதமான காரியங்கள், அதிசயமான காரியங்கள், அன்பான காரியங்கள், உமக்குப் பிரியமான காரியங்கள் யாவும் செய்திட எமக்கு உதவி செய்யும் கர்த்தாவே!

8. **கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் அவர் ஆசீர்வதிப்பார் - சங் 115/12**

கர்த்தாவே! நோவாவை நினைத்தவரே! எம்மை நினைத்தருளும். எம் மேல் நினைவாயிருந்து எம்மை ஆசீர்வதித்திடும்; எம்மேல் நினைவாயிருந்து சகல தீமைகளுக்கும் விலக்கி இரட்சித்திடும். எம் மேல் நினைவாயிருந்து சகல அடிமைத்தனங்களுக்கும் விலக்கி இரட்சியும் - ஆமென்.

9. **கர்த்தாவே! உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை - சங் 9/10**

கர்த்தாவே! உம்மைத் தேடுகின்ற உம் பிள்ளைகளை ஒருபோதும் கைவிடாதிரும்; கைபிடித்திடும்; நடத்திடும்; முன் செல்லும்; வழிகாட்டிடும்; வெளிச்சமாயிரும்; துணையாயிரும்; ஆலோசனைகள் அள்ளித் தாரும். சாத்தான், சத்துருக்கள் கைகளுக்கு ஒப்புக் கொடாதபடி உம் உள்ளங்கைகளில் எம்மை வரைந்து வைத்திடும்.

**10. 'நீ தண்ணீர்களை' கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்' ஏசா.43/2. கர்த்தாவே! கீழ்கண்ட தண்ணீர்களைக் கடக்கப் பண்ணும்.**

1. கள்ளர்களால் வரும் மோசங்கள்.
2. சுயஜனங்களால் வரும் மோசங்கள்.
3. அந்நிய ஜனங்களால் வரும் மோசங்கள்.
4. பட்டணங்களில் வரும் மோசங்கள்.
5. வனாந்தரத்தில் உண்டாகும் மோசங்கள்.
6. சமுத்திரத்தில் உண்டாகும் மோசங்கள்.
7. கள்ளச் சகோதரர்களால் உண்டாகும் மோசங்கள்.
8. கண் விழிப்பால் வரும் மோசங்கள்.
9. பசியால் வரும் மோசங்கள்.
10. தாகத்தால் வரும் மோசங்கள்.
11. உபவாசத்தால் வரும் மோசங்கள்.
12. குளிரால் வரும் மோசங்கள்.
13. வெயிலால் வரும் மோசங்கள்.
14. விஷங்களால் வரும் மோசங்கள்.
15. பிசாசால் வரும் மோசங்கள். ஆமென்.

**11. 'நீ தண்ணீர்களைக்' கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்' ஏசா.43/2. கர்த்தாவே!**

1. எழும்பும் நதிகளை அடக்கும்.
2. இரைச்சலிட்டு எழும்பும் நதிகளையடக்கும்.
3. அலைதிரண்டு எழும்பும் நதிகளை அடக்கும்.
4. சமுத்திரத்தை அடக்கும்.
5. அலைதிரண்டு வரும் சமுத்திரத்தை அடக்கும்.
6. செங்கடல்களை அடக்கும்.
7. கடக்க முடியாத செங்கடல்களில் பாதைகள் திறந்திடும்.
8. செங்கடல்களை வற்றப்பண்ணும்.
9. செங்கடல்களின் பள்ளங்களை நிரப்பும்.
10. செங்கடல்களிலே பாதை உண்டாக்கும்.
11. பாதையில் இருபக்கமும் பாதுகாவல் தாரும்.

**12. 'உன் தேவனாகிய கர்த்தரை நீ வேண்டிக்கொண்டதின் படியெல்லாம் அவர் செய்வார் - உபா 18/16**

1. கர்த்தாவே! நான் வேண்டிக் கொண்ட எல்லா வேண்டுதல்களையும் கேட்டு உம் சித்தப்படி பதிலளியும்.
2. நான் வேண்டிக் கொண்ட காரியங்கள் உமக்குப் பிரியமில்லை யானால் அதை எனக்கு உணர்த்தும்.
3. நான் வேண்டிக் கொண்ட காரியங்களை எப்பொழுது தர உமக்கு சித்தமோ அப்பொழுது தாரும்.
4. உமக்கு சித்தமில்லா ஒன்றையும் நான் பெறும்படி வேண்டிக் கொள்ளாதிருப்பேனாக.
5. என் வேண்டுதல், விண்ணப்பம் யாவும் உம் சித்தப்படியே இருப்பதாக.
6. சுய சித்தம் என் வேண்டுதலில் செயல்படாது இருப்பதாக, ஆமென்.

**13. 'நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்' - சங் 32/8**

1. கர்த்தாவே! நான் உமக்குப் பிரியமான வாழ்க்கை எவ்வாறு வாழ வேண்டும் என்பதைக் கற்றுத்தாரும்.
2. கர்த்தாவே! நான் எங்கு செல்ல வேண்டும் என்பதைக் கற்றுத்தாரும்.
3. கர்த்தாவே! எதைச் செய்ய வேண்டும் என்பதைக் கற்றுத்தாரும்.
4. கர்த்தாவே! எப்போது செய்ய வேண்டும் என்பதைக் கற்றுத்தாரும்.
5. கர்த்தாவே! எதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைக் கற்றுத்தாரும்.
6. கர்த்தாவே! எதை யார் மூலம் செய்ய வேண்டும் என்பதைக் கற்றுத்தாரும்.
7. கர்த்தாவே! எதை எந்த இடத்தில் செய்ய வேண்டும் என்பதைக் கற்றுத்தாரும். ஆமென்.

**14. 'உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்' மீகா 7/15.**

1. கர்த்தாவே! என் சரீரத்தில் அதிசயம் செய்யும்.
2. என் இல்லத்தில் அதிசயம் செய்யும்.
3. என் தொழிலில் அதிசயம் செய்யும்.

4. என் குடும்பத்தில் அதிசயம் செய்யும்.
5. என் சபையில் அதிசயம் செய்யும்.
6. என் ஊழியத்தில் அதிசயம் செய்யும்.
7. இல்லாதவைகளை இருக்கிறது போல அழைக்கிற அதிசயம் செய்யும்.
8. எண்ணிமுடியாத அதிசயம் செய்யும்.
9. ஆராய்ந்து முடியாத அதிசயம் செய்யும். ஆமென்.

**15. 'கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார்' - உபா 28/14**
**கர்த்தாவே!**

1. என்னை வாலாக்க எண்ணும் நபர்கள் முன் உம் நாமத்தினிமித்தம் தலையாக்கும்.
2. என்னைத் தலைகுனிய வைத்த நபர்கள் முன் உம் நாமத்தினிமித்தம் தலைநிமிரப் பண்ணும்.
3. என்னை அடிமைப்படுத்திய ஜனங்கள் முன் உம் நாமத்தினிமித்தம் கனம் பண்ணும்.
4. கர்த்தாவே! உம் நாமத்திற்காக நான் கொண்ட வைராக்கியத்தை நோக்கிப் பார்த்து என்னை விடுவித்துத் தலையாக்கும்.
5. ஒருவனும் எதிர்த்து நிற்க முடியாத வல்லமை, ஆவி, அக்கினி, வரங்கள், ஞானம், பெலன் உள்ளவனாக்கும். ஆமென்.

**16. 'நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன்' - எரே 30/17**

கர்த்தாவே! என் மனக்காயம், சரீரக் காயம், இதயக் காயம், உள்ளத்தின் காயம், உள்ளிந்திரியக் காயம், மூளையின் காயம், ஆவியின் காயம். ஆத்துமாவின் காயம், சாத்தான் போட்ட காயம், சத்துருவால் வந்த காயம், வியாதியால் வந்த காயம், விபத்தால் வந்த காயம், மாறாத காயம், தீராத காயம் யாவையும் அகற்றும் ஆமென்.

**17. 'நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே ஆசீர்வாதமாய் இருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன்' - சகரியா 8/13**
**கர்த்தாவே!**

1. புற ஜாதிகளுக்கு முன்னர் உம் நாமத்தினிமித்தம் எம்மை உயர்த்தும்.
2. நீர் மெய்யாகவே நேசிக்கிறீர் என்பதை புறஜாதிகளுக்கு வெளியரங்கமாக்கும்.

3. புறஜாதிகளால் எம்மேல் வந்த நிந்தை, சாத்தான் கட்டுகள் யாவையும் கிருபையாய் அகற்றி வெற்றிக்கொடி பிடிக்கப்பண்ணும்.
4. உம்முடைய அளவில்லா ஞானம் உள்ளவர்களாய் புறஜாதிகள் முன்னர் எம்மை உயர்த்தும்.
5. வருங்காரியங்களைக் குறித்து வெளிப்படுத்தி புறஜாதிகள் முன் உம்மை மகிமைப்படுத்தும்.
6. புறஜாதிகள் முன் ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தும். ஆமென்.

**18. 'என்னில் நிலைத்திருங்கள். நானும் உங்களில் நிலைத்திருப்பேன்' - யோவான் 15/4**

**கர்த்தாவே!**

1. செழிப்பில் உம்மில் நிலைத்திருப்பேனாக.
2. வறுமையில் உம்மில் நிலைத்திருப்பேனாக.
3. கனத்தில் உம்மில் நிலைத்திருப்பேனாக.
4. கனவீனத்திலும் உம்மில் நிலைத்திருப்பேனாக.
5. சுகத்தில் உம்மில் நிலைத்திருப்பேனாக.
6. சுகவீனத்திலும் உம்மில் நிலைத்திருப்பேனாக.
7. தாழ்விலே உம்மில் நிலைத்திருப்பேனாக.
8. வாழ்வில் உம்மில் நிலைத்திருப்பேனாக.
9. சோதனைகளில் உம்மில் நிலைத்திருப்பேனாக.
10. உபத்திரவத்தில் உம்மில் நிலைத்திருப்பேனாக.
11. விழிப்பில் உம்மில் நிலைத்திருப்பேனாக.
12 உறங்குகையில் உம்மில் நிலைத்திருப்பேனாக.

**19. 'இரட்டிப்பான நன்மையைத் தருவேன் இன்றைக்கே தருவேன்' - சகரியா 9/12.**

1. இரட்டிப்பான உலக நன்மைகள் உம்முடைய நாமத்தை உயர்த்தும்படி தாரும்.
2. இரட்டிப்பான ஆவிக்கேற்ற நன்மைகள் உம் நாமத்தை உயர்த்தும்படி தாரும்.
3. இரட்டிப்பான நேரம் உம்மை மகிமைப்படுத்த தாரும்.
4. இரட்டிப்பான பெலன் உம்மை மகிமைப்படுத்த தாரும்.
5. இரட்டிப்பான ஞானம் உம்மை மகிமைப்படுத்த தாரும்.
6. இரட்டிப்பான மனுஷ தயவு உம்மை மகிமைப்படுத்த தாரும்.

இயேசுவே! ஆமென்.

**20. 'உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்' - சங் 128/2.**

1. கர்த்தாவே! என் கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதியும்.
2. என் கைகளின் பிரயாசங்களில் பழுது வராதிருப்பதாக.
3. என் கைகளின் பிரயாசங்களில் பலன் உண்டாவதாக.
4. என் கைகளின் பிரயாசங்களில் எனக்கு நன்மைகள் உண்டாவதாக.
5. என் கைகளின் பிரயாசங்களால் எனக்குப் போஜனம் கிடைப்பதாக.
6. என் கைகளில் பிரயாசங்களை திருடர்கள், கொள்ளையர்கள், தேவ சத்துருக்கள் அபகரிக்க விடாதேயும். ஆமென்.

## சுயபரிசோதனைக் கேள்விகள்:

**401.** இயேசுவை சேவிக்கிறதினால் என்ன பலன் என்று நினைத்து சோர்ந்து போனாயோ? அல்லது உற்சாகமாக உன் பணிகளைச் செய்கிறாயா? - கொலோ 3/23, 24

**402.** இடைவிடாமல் எப்பொழுதும் ஸ்தோத்தரித்து ஜெபிக்கிறாயா? - கொலோ 4/2

**403.** சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை எல்லா இடங்களிலும் தேவன் திறந்தருளும்படி ஜெபிக்கிறாயா? - கொலோ 4/4

**404.** உன் நேரத்தை வீணடிக்கிறாயா? அல்லது ஞானமாகப் பிரயோஜனப்படுத்துகிறாயா? - கொலோ 4/5

**405.** உன் விசுவாத்தைக் குறித்து கேட்பவர்களுக்கு மறு உத்தரவு சொல்ல அறிந்திருக்கிறாயா? - கொலோ 4/6

**406.** பிறருடைய இருதயங்களைத் தேற்றுகிறாயா? அல்லது புண்படுத்துகிறாயா? - கொலோ 4/8.

**407.** கர்த்தருக்குச் சித்தமானவைகளை தினமும் செய்யக் கவனமுள்ளவனாயிருக்கிறாயா? - கொலோ 4/12

**408.** கர்த்தரிடத்தில் நீ பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாக இருக்கிறாயா? - கொலோ 4/17.

**409.** உன் விசுவாசம் கிரியை உள்ளதா அல்லது செத்ததா? - Iதெச 1/2

410. பரி. ஆவியின் வல்லமையோடு சுவிசேஷத்தை அறிவிக்கிறாயா? - Iதெச 1/5

411. மிகுந்த உபத்திரவத்திலும் கர்த்தரைப் பின்பற்றுகிறாயா? - Iதெச 1/6

412. மற்ற விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக இருக்கிறாயா? - Iதெச 1/6

413. எல்லாவற்றிலும் தேவனுக்குப் பிரியமாக நடக்கின்றாயா? - Iதெச 2/4.

414. மனுஷரால் வரும் மகிமையை உதறித் தள்ளுகிறாயா? அல்லது தேடி ஓடுகிறாயா? - Iதெச 2/6.

415. பிறருக்கு பாரமாயிராதபடிக்கு வேலை செய்து சாப்பிடுகிறாயா? - Iதெச 2/9

416. பரிசுத்தமும், நீதியும், பிழையின்மையுமாய் நடக்கிறாயா? - Iதெச 2/10.

417. ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பில் நாளுக்கு நாள் பெருகுகிறீர்களா?- Iதெச 3/12.

418. தேவனை அசட்டை பண்ணுகிறாயா அல்லது கனம் பண்ணுகிறாயா? - Iதெச 4/8.

419. கர்த்தருக்கு ஊழியம் செய்பவர்களுக்காய் தினம் ஜெபிக்கிறாயா? - IIதெச 3/2

420. சோர்ந்து போகாமல் நன்மை செய்கிறாயா? - IIதெச 3/13.

421. வீண்பேச்சுக்கு இடம் கொடுக்கிறாயா? அல்லது ஆரோக்கிய மான உபதேசத்துக்கு செவி கொடுக்கிறாயா? - Iதீ 1/6,11.

422. கர்த்தருக்கு உண்மையுள்ளவனாய் இருக்கிறாயா? - Iதீ 1/12.

423. உன் மனச்சாட்சி சுத்தமாயிருக்கிறதா? - I தீ 1/19.

424. உலகிலுள்ள எல்லாரும் இரட்சிக்கப்பட பாரத்தோடு ஜெபிக்கிறாயா? - I தீ 2/1-4.

425. பரிசுத்தம் உன் அலங்காரமா? அல்லது ஆடம்பரம் உன் அலங்காரமா? - I தீ 2/9-11.